
# ஜீவ ஒளி

“என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்.”
(யோவான் 8:12)

**2012 ஆகஸ்ட் வெளியீடு**



விசுவாசிக்கிற உங்களுக்கு
அவர் (இயேசு) விலையேறப்பெற்றவர்.
1 பேதுரு 2:7



# விலையேறப்பெற்றவைகள்



நாம் பார்க்கப் போகின்ற வேத வசனங்களில் விலையேறப்பெற்றவை என்ற சொல்லுக்கு தமிழ் வேதாகமத்தில் வெவ்வேறு சொற்கள் பாவிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆங்கில வேதாகமத்தில் அநேகமாக **Precious** என்ற ஒரே சொல்லே பாவிக்கப்பட்டுள்ளது.

விலையேறப்பெற்றவைகள் அல்லது மிக அருமையானவைகள் என உங்களால் எவைகளைக் கருத முடிகிறது. பணம், பதவி, தங்க ஆபரணங்கள், விலை மதிப்பான இரத்தினங்கள், வைரங்கள் பொதிந்த ஆடை ஆபரணங்கள், கோடிக்கணக்கான சொத்துகளைச் சேர்த்தல், இலட்சாதிபதியாகுதல். இவைகள் யாவுமே ஒருநாள் அழிந்துபோகக் கூடியவை. எல்லாம் தற்காலிகமானவை என ஆணித்தரமாக எம்மால் எடுத்துக் கூறமுடியும்.

பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் விலையேறப் பெற்றவைகள் எனக் கூறப்பட்டவைகள் சதா காலத்திற்கும் பிரயோஜனதுள்ளவைகளாக காணப்படுகின்றன. அவை நிலைத்திருக்கக் கூடியவைகளாயும் உள்ளன.

1. இயேசு கிறிஸ்துவின் நாமம் விலையேறப்பெற்றது.
2. இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் விலையேறப்பெற்றது.
3. இயேசு கிறிஸ்துவானவரே எமக்கு விலையேறப்பெற்றவர்
4. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் விலையேறப்பெற்றது.
5. தேவனுடைய ஆலோசனைகள் விலையேறப்பெற்றது.
6. தேவன் மேல் நாம் கொண்டுள்ள விசுவாசம் விலையேறப்பெற்றது
7. கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு விலையேறப்பெற்றது

### இயேசுகிறிஸ்துவின் திருநாமம்

“ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” (பிலிப்பியர் 2: 9-12).

“எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! (சங்கீதம் 8:1).

அந்த நாமத்திலே எம்மை தெரிந்து கொண்டார். அருகில் செல்ல முடியாத தேவனிடத்தில் அந்த நாமம் நல்ல தொடர்பை ஏற்படுத்தித் தந்ததோடு மட்டுமல்லாமல் அது எமக்கு உயிர்மீட்சியையும் சந்தோஷத்தையும், ஆறுதலையும் தருகின்றது. அவருடைய நாமம் இனிமையானது. மதிப்புக்குரியது. எமது பயத்தை அடியோடு அகற்றி, துக்கத்தை நீங்கச் செய்தது. அந்த நாமம் எமக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்து, வெற்றியைத் தந்தது. ஆதலால், அந்நாமத்தை நாம் எங்கு சென்றாலும் எம் உள்ளத்தில் சுமந்து செல்லவும், எல்லா வேளைகளிலும் அந்த விலையேறப்பெற்ற நாமத்தை நினைவு கூறவும், தியானிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

## இயேசுகிறிஸ்துவின் திரு இரத்தம்

உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1பேதுரு 1:18,19). எப்படிப்பட்ட ஒரு பாவியாயினும் அவர் நமக்காக சிலுவையில் சிந்தின இரத்தத்தின் விலைமதிப்பை அவன் விசுவாசிப்பானேயாகில் இரட்சிக்கப்படுவான். “நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம் (எபிரெயர் 9:14)”

## இயேசுகிறிஸ்துவானவரே நமக்கு விலையேறப்பெற்றவர்

இதோ! தெரிந்துகொள்ளப்பட்டதும், விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக் கல்லை சீயோனில் வைக்கிறேன் அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லையென்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது (1பேதுரு 2:6,7). அந்த விலையேறுப் பெற்ற மூலைக்கல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார் (எபேசியர் 4:20). ஆண்டவர் மட்டுமே நமக்கு மிக விலை உயர்ந்தவர் என்று அறிந்ததினாலேயே அநேக தேவனுடைய ஜனங்கள் தங்கள் ஜீவனையும் பொருட்டாக எண்ணாமல் அதை அவருக்கு கொடுக்க முன் வந்தார்கள். சில முஸ்லிம் நாடுகளில் தேவனுடைய பிள்ளைகள் அவமானப்படுவதைக் காண்கிறோம். பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது யாராவது இந்த பஸ்ஸில் கிறிஸ்தவர்கள் இருக்கிறீர்களா? என விசாரிக்கையில் அவர்கள் முன்வரும் போது அவர்களுடைய கண்களை பிடுங்கி வேதனைக்கு உள்ளாக்குகிறார்கள். சில நாடுகளில் வீடுகளையும் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடுகின்ற இடங்களையும் எரித்து விடுகிறார்கள். கடைவீதிகளுக்குக் கூட செல்ல முடியாத ஒரு நிரப்பந்தமான நிலைமைக்குள் வாழ்கிறார்கள். இந்த வேதனைகள் யாவையும் சகித்து, நம் நேசர் எவ்வளவு சிறப்பானவர் என்பதை உணர்ந்து பொறுமையுடன் அவருக்காகவே வாழ்கிறார்கள்.

## தேவனுடைய வாக்குத்தத்தங்கள் விலையேறப்பெற்றவை

“தம்முடைய மகிமையினாலும், காருணியத்தாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும்,அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்-தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது” (2 பேதுரு 1:3,4). வாக்குத்தத்தம் பண்ணின நம் தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிற படியால், அவைகளை நிறைவேற்ற வல்லமை உள்ளவராய் இருக்கிறார்.



### தேவனுடைய ஆலோசனைகள் விலையேறப்பெற்றவை

தேவனே உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்: அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால் மணலைப்பார்க்கிலும் அதிகமாம் (சங்கீதம் 139:17,18).

கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவர் எம்மை நினைந்தருள நாம் யார்? உங்கள் கைகளில் மணலை எடுத்து எண்ண முடியுமா? ஆதலால் எமக்கு அவரைப் பற்றிய சிந்தனை எவ்வளவாய் காணப்படு-கிறது. நாம் அவரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறோமா? ஏனெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்.

### தேவனுடைய பார்வையில் எமது விசுவாசம் விலையேறப்பெற்றது

அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக்காணப்படும் (1பேதுரு 1:7).

விசுவாசியே! எமது கிறிஸ்தவ வாழ்க்கையானது விசுவாசத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்டு, விசுவாசத்தில் நிறைவடைகிறபடியால் அன்றாட எமது வாழ்க்கை அனுபவத்தில் நாம் ஆண்டவர் பேரில் கொண்ட எமது விசுவாசம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். நாம் துன்பத்தில் கடந்து செல்லும் போது பயப்பட்டு கலங்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அந்த பரீட்சைக்குள்ளாக தேவன் நம்மோடு இருக்கிறார். எமது விசுவாசத்திற்கான பூரண பலனை அவர் அருளுவார்.

### தேவனுடைய பார்வையில் பரிசுத்தவான்களின் மரணம் விலையேறப்பெற்றது

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது (சங்கீதம் 116:15). எப்படிப்பட்ட விசுவாசியாயினும் சிலர் மரணத்தை எதிர் நோக்கும்போது அதைரியப்படுவார்கள். ஆனாலும், நாம் மேற்கூறிய வார்த்தையைக் கவனிப்போமானால் அது எவ்வளவு சத்தியமானது. நாம் வேதத்திலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக்கொண்டால் ஸ்தேவானின் மரணம். அவனை வரவேற்க ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எழுந்து நிற்கிறதை அப்போஸ். 7:54லிருந்து கவனிப்போம். ஆதலால், மரணத்தைக் கண்டு நாம் பயப்படத்தேவையில்லை.

*"மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும், நம்பிக்கைக்கும் தக்கதாய் அப்படி முடியும். கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம் (பிலிப்பியர் 1:20,21)."*

நாமும் பவுலைப் போன்று கர்த்தருக்காக காரியங்களை நிறைவேற்றிக் காத்திருப்போமாக!

**அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக்காணப்படும்**

-சகோதரி **கேட் டுசைன்ட்-**

# கர்த்தரிடத்தில் பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; கர்த்தருக்காக பெரிய காரியங்களை முயன்று பாருங்கள்

"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து; நீ வலது புறத்திலும் இடது புறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்தியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக் கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்." ஏசாயா 54:2,3

மேலே குறிப்பிட்ட வசனத்திலிருந்து வில்லியம் கேரி (***William Carey***) செய்த பிரசங்கத்தின் சாராம்சமாக சொல்லப்பட்ட "Expect great things from GOD; Attempt great things for GOD (கர்த்தரிடத்தில் பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; கர்த்தருக்காக பெரிய காரியங்களை முயன்று பாருங்கள்)" என்ற தலைப்பை மையமாகக் கொண்டு வரையப்படும் சிறு கட்டுரை.

நம்முடைய இரட்சகராகிய ஆண்டவர் கிறிஸ்து இயேசு நமக்காக தமது ஜீவனைப் பலியாகக் கொடுத்து நமது பாவத்திற்கான தண்டனையை செலுத்தி, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்தெழுந்து 40 நாளளவும் அநேகருக்குக் காணப்பட்டு, பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கடைசி தருணத்தில் அவர் நமக்கிட்ட கடைசி கட்டளை என்னவென்றால், "நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15)'' என்பதேயாகும்.

நம்மில் அநேகர் இச்சுவிசேஷத்தை அறிவோம், அனுபவித்துள்ளோம் ஆனால் நம்மில் எத்தனை பேர் இதை அறிவித்துள்ளோம்?

நாம் அநேக பிரசங்கங்களில் ''குறைந்த பட்சம் ஒருவருக்கென்றாலும் ஆண்டவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என கேட்டுப்பழக்கப்பட்டதனாலேயோ என்னவோ, ஒருவருக்கு மட்டும் சொன்னால் போதும் என எண்ணி திருப்தியடைந்து விடுகின்றோம். சில வேளைகளில் ''இன்று சொல்ல முடியாமல் போய் விட்டது, வேலை அதிகம் தானே, நாளை சொல்லுவோம்'' என்று அலட்சியம் செய்து விடுகின்றோம்.



ஆனால், ஆண்டவருடைய கை குறுகிப்போகவில்லை. மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமானால், அநேகர் மனந்திரும்பும் பட்சத்தில் பரலோகத்தில் எவ்வளவு மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்?

அப்படியென்றால், நாம் ஏன் ஆண்டவருக்காக பெரிய காரியங்களை செய்யக்கூடாது?

**Andrew Fuller**



என்ற போதகரிடம் வில்லியம் கேரி கேட்ட கேள்விகளை நீங்களே உங்களிடம் ஒவ்வொரு நாளும் கேட்டுப்பாருங்கள்

- நீர் இன்னும் ஒன்றும் செய்யாமல் மீண்டும் வீடு திரும்பப்போகிறீரா?
- நீர் கிறிஸ்துவுக்காக இ ன்றும் கூட ஒன்றும் சாதிக்க முன் வராது சும்மா போவதற்கு யோசித்து விட்டீரா?
- நீர் நற்செய்தி வேலைக்காக நடைமுறையில் ஒரு சாதனையையும் சாதிக்க மாட்டீரோ?
- எந்நாளும் போல் இந்நாளும் ஒன்றும் செய்யாது வீணாய் வீடு திரும்புவீரோ?

**Expect great things from God;**
**Attempt great things for God.**

கர்த்தரிடத்தில் பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; கர்த்தருக்காக பெரிய காரியங்களை முயன்று பாருங்கள்.

-சகோதரன் **S** வரபிரசாத்-



## எங்கள் ஐக்கியத்தில் இடம் பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

மு.ப 8.15 ஞாயிறு பாடசாலை
மு.ப 9.30 ஆராதனை வேளை
பி.ப 1.30 வாலிபர்க் கூட்டம்
பி.ப 4.00 சிங்கள சுவிசேஷக் கூட்டம்
பி.ப 6.00 ஆங்கில சுவிசேஷக் கூட்டம்

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 தமிழ் சுவிசேஷக் கூட்டம்

**புதன் கிழமை**


பி.ப 6.00 ஜெபக் கூட்டம்
சுகவீனர்களுக்கு மூப்பர்கள் எண்ணெய் அபிஷேகித்து ஜெபம் பண்ணுதல். (யாக்கோபு 5:16)

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 வேத ஆராய்ச்சி

*இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!*

# தாலந்துகள்




வாசிக்க வேண்டிய வேத பகுதி மத்தேயு 25:14-31

15 ஆம் வசனம் - அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும் ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாக கொடுத்து உடனே பிரயாணப்பட்டுப் போனான்.

ஆண்டவர் எமது வாழ்க்கையிலும் எங்கள் திறமையின் அடிப்படையில் தாலந்துகளை வழங்கியுள்ளார். அவைகளை நாம் ஆண்டவருக்காக எவ்வளவாய் ஊழியங்களிலே பயன்படுத்துகிறோம் என்பதிலேயே தங்கியுள்ளது. 21, 23, 26 இம்மூன்று வசனங்களில் இரண்டு விதமான ஊழியக்காரர்களை நாம் காண்கிறோம்.

1. உத்தமமும், உண்மையுள்ள ஊழியக்காரன்

2. பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரன்



**உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனின் குணாதிசயங்கள்:**

1. அவர்களுக்கு கள்ளங்கபடமில்லா இருதயம் காணப்பட்டது. தங்கள் எஜமானனைக்குறித்து அவர்களுக்கு நல்லதொரு மதிப்பீட்டையும், மரியாதையும் கொண்டிருந்தார்கள்.

2.அவர்களுடைய எஜமான் கொடுத்த தாலந்துகளை அவர்கள் முழு விருப்பத்துடன் பெற்றுக்கொண்டனர்.
3. இரண்டு தாலந்துகளைப் பெற்றவர் அவருக்கு ஐந்து தாலந்துகள் கிடைத்தது எனக்கு ஏன் இரண்டு என்று குறை கூறவில்லை.

4. ஐந்து தாலந்துகளைப் பெற்ற ஊழியன் தன்னைக் குறித்து மெச்சிக்கொள்ளவில்லை. தன்னைப் புகழாமல் தாழ்மையுடன் நடந்து கொண்டான். ஏனென்றால், எமக்குக் கையளிக்கப்பட்டவைகள் யாவும் தேவனிடத்தில் இருந்து வந்தவை-களாயிருக்கின்றன. அவைகளில் வரும் புகழ் யாவும் அவருக்கே உரித்தாகட்டும். இந்த சிந்தை எமக்கு மிக்க அவசியமாயிருக்கிறது.

5. தங்களது எஜமானின் வருகை தாமதித்தாலும், தங்களுடைய எஜமான் திரும்பி வரும் வரை பொறுமையுடனும், விசுவாசத்துடனும் காத்திருந்தார்கள். வெறுமனே இல்லாமல் தன் எஜமானனுக்கு இலாபத்தைத் தேடினார்கள்.

**பொல்லாத சோம்பலுள்ள ஊழியக்காரனின் குணாதிசயங்கள்:**

அவன் கல் நெஞ்சனாயிருந்தான். தன் எஜமானனைக் குறித்து அவனுக்கு நல்ல மதிப்போ, மரியாதையோ காணப்படவில்லை. ஆதலால் தான் அவனுடைய வார்த்தையின் அடிப்படையிலேயே தண்டிக்கப்பட்டான். “பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்” என்று அவனின் எஜமான் கோபத்துடன் கட்டளையிடுகிறான்.

கர்த்தர் ஒவ்வொரு விசுவாசிக்கும் அவர்களின் திறமை அடிப்படையில் தாலந்துகளை நிச்சயமாகவே அருளியுள்ளார். அதிலே பாரபட்சம் எதுவுமேயிருக்காது. நாங்கள் அவைகளை இனங்கண்டு சரியான முறையில் பாவிக்கிறோமா? நாங்கள் கர்த்தருடைய ஊழியங்களிலே நாங்கள் தொடர்ந்தும் அவருக்காக உண்மையுடன் உழைத்து அநேகரை ஆண்டவரண்டைக்கு நடத்துகிறவர்களாகக் காணப்பட வேண்டும். ஆதலால், நாங்கள் மிகக் அவதானத்துடனும், நேர்மையுடனும் தேவனுடைய பணியில் ஈடுபட வேண்டும். நமது நேர்மைக்கும், உழைப்பிற்கும் எமக்கு நித்தியத்தில் பலன் உண்டு.

பார்த்தீர்களா, உத்தமத்துடனும், உண்மையுடனும் நடந்து கொண்ட அவனது அந்த ஊழியக்காரர்களுக்கு அவர்களுடைய எஜமான் என்ன விதமான வெகுமதியைக் கொடுத்தான் என்று!

*“உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே! கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய். அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி”* (வசனங்கள் 21,23).

தேவன் இதைவிட பன்மடங்கு ஆசீர்வாதங்களை கிறிஸ்துவுக்குள் எமக்காக வைத்திருக்கிறார். “இதோ! சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது.” (வெளிப்படுத்தின விசேஷம் 22:12)

**பார்த்தீர்களா, உத்தமத்துடனும், உண்மையுடனும் நடந்து கொண்ட அவனது அந்த ஊழியக்காரர்களுக்கு அவர்களுடைய எஜமான் என்ன விதமான வெகுமதியைக் கொடுத்தான் என்று!**

அவைகளை நாம் பெற்றுக்கொள்ள உண்மையாய் உழைப்போமாக! தேவனிடத்தில் பெலன் வேண்டி நித்தமும் அவரை மன்றாடி ஜெபிப்போமாக!

-சகோதரன் **R.RAMESH DANIEL-**

# கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் நமக்கிருக்கிற சுதந்திரத்தின் ஐசுவரியம்



**"அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்: கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார்: கர்த்தரே இதைச் சொன்னார்"** ஏசாயா 25:8

ஒரு உண்மையான விசுவாசி தான் "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" என்று சொல்ல முடியும். பூரண சமாதானத்துடன் அவன் மரணத்தை சந்திக்க முடியும். நமக்கு அருமையானவர்களை நாம் இழக்கும் பொழுது, நாம் மீண்டும் அவர்களை மகிமை அடைந்த சரீரங்களில் சந்தித்து இணை பிரியாது நித்தியமாக வாழுவோம் என்ற நம்பிக்கையும் எண்ணமும் நமக்கு உண்டாகிறது

இரட்சிக்கப்படாத ஒருவன் உலக முழுவதிலுமே மிகத் திடகாத்திரமான வீரனாக இருந்தாலும் மரிக்குந் தறுவாயில் மரண பயத்திலிருந்து தன்னையே விடுவித்துக் கொள்ள முடியாது. ஆனால், ஒரு விசுவாசியோ மரணம் ஒரு தற்காலிக பிரிவு தான் என்றும், சீக்கிரத்தில் மறுபடியும் சந்தித்து இனி ஒருக்காலும் பிரியாதிருப்போம் என்ற அறிவை அனுபவ ரீதியாகப் பெற்றிருக்கிறான். ஏனென்றால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு மரணத்தின் மீது பூரண வெற்றியைக் கொடுத்துள்ளார்.

**"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்"** ஏசாயா 26:3

இது உள்ளான சமாதானம் என்ற சிகரத்தைக் குறிக்கும். "உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்டவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்". நீ தேவன் சொல்வதையும் அவருடைய சித்தத்தையும் செய்து கொண்டிருக்கு மட்டும் உலகத்தில் எந்தவொரு காரியமோ, உபத்திரவமோ, நோயோ, பிணியோ, கஷ்ட நஷ்டமோ உன்னிலிருக்கும் தேவனுடைய சமாதானத்தை எடுத்துப் போடவோ, அசைக்கவோ முடியாது. பிசாசினாலும் இந்த சமாதானத்தை எடுத்துப் போடமுடியாது. இது பூரண சமாதானம். இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் உள்ளங்களில் ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே இருக்கின்ற மெய்யான சமாதானம். இது நதியைப் போன்று பெருகுகிற சமாதானம்.

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு மரணத்தின் மீது பூரண வெற்றியைக் கொடுத்துள்ளார்.**

**அனுதின தேவ இரகசியங்களிலிருந்து சகோதரர் பக்த்சிங்**

# மறுபடி பிறந்தேன்...

–சகோதரன் ரவிசந்திரனின் சாட்சி–

**"அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபேசியர் 2:1).**

நான் ஹட்டன் பிரதேசத்தில் ஒரு பிரபலமான இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, சுமார் 25 வருடங்களாக மிக மோசமான பாவச் செயல்களுடன் வாழ்ந்து வந்தேன். அக்காலக் கட்டங்களில் நான் என்னையே மெச்சிக் கொள்கிறவனாகவும், மற்றவர்-களையோ ஒரு பொருட்டாகவும் எண்ணாதவனாகவும் அகங்காரத்துடன் நடந்தேன். பல தீய பழக்கங்களுக்கு அடிமையாகிப் போனேன். புகை பிடித்தல், மதுபானம் அருந்துதல், பொறுமையின்மை சண்டித்தனம் இப்படியான பல பாவங்களில் ஈடு பாடுடையவனாய் இருந்தேன். இச்சூழ்நிலையில் என் வாழ்க்கையிலே பயங்கரமான பல சம்பவங்கள் நெருக்கின. அநேக தடவைகள் மரணம் என்னை கடந்து சென்றதை உணர்ந்தேன். என்னை எந்நேரமும் பயப்படுத்துகிற, என் சரீரமெல்லாம் நடுக்கம் ஏற்படுகிற மனவியாதி என்னை ஆட்கொண்டது. சுமார் 6 வருடங்களாக அந்நோயோடு நான் போராடினேன். அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் பரிதாப நிலைமையைக் கண்டு எனது தாயாரும் எனது மனைவியும் என்னைப் பல இந்து கோவில்களுக்கு அழைத்துச் சென்று வழிபாடுகள் நடத்தி, மந்திரங்கள் ஓதப்பட்ட தாயித்துக்கயிறை என் கழுத்திலே கட்டினார்கள். என்னை சுகப்படுத்த அவர்கள் படாத பாடுகள் பட்டார்கள். ஆனால், வியாதி நாளுக்கு நாள் கூடிக்கொண்டே சென்றது. நான் எரிச்சலடைந்தவனாய் கழுத்திலிருந்த அந்த கயிறையும் கழற்றி வீசினேன்.

அதற்குப் பிறகு என் ஞாபகத்திற்கு வந்தது என்னவென்றால், சில வருடங்களுக்கு முன்பு சில கிறிஸ்தவ பக்தர்கள் என்னிடம் கூறின விடயம். "இப்படிப்பட்ட வியாதிக்கார்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுகப்படுத்துவார்". உடனே நான் கிறிஸ்தவ பக்தரான என் மாமாவுடன் தொடர்பு கொண்டு அவரை என்னை ஒரு கிறிஸ்தவ சபைக்கு அழைத்துச் செல்லும்படி வேண்டினேன். அவர் அப்பகுதியில் தேவப்பணியைச் செய்து வருகிற ஊழியனாகிய சகோதரர் எட்வினை எனது வீட்டிற்கு அழைத்து வந்தார். சகோதரர் எட்வின் அவர்கள் எனக்காக தேவனிடத்தில் ஊக்கமாக மன்றாடினார். ஜெபத்திற்குப் பிறகு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியான அவரின் மகா இரக்கத்தினால் உருவாகும் பாவ நிவிர்த்தியையும், அந்த இரட்சிப்பின் நிச்சயத்தையும் மிகத் தெளிவாக காட்டும் ஒரு துண்டுப் பிரசுரத்தையும் கொடுத்து, கண்டிப்பாக அதை வாசிக்கும்படி கூறினார். அதை நான் பயபக்தியுடன் கையில் எடுத்து வாசித்துக் கொண்டிருக்கும்போதே என் சரீரத்தில் ஒரு நடுக்கமேற்பட்டு கீழே விழுந்து விட்டேன். அடுத்து இரண்டு தினங்களில் எனது சரீரத்திலும், எனது மனதிலும் ஒரு நிம்மதியையும், மனமகிழ்ச்சியையும் உணர்ந்தேன்.

நான் ஒரு உண்மையான சபைக்கு செல்லுவேனென்று முடிவெடுத்தேன். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் முழு விசுவாசத்துடன் என்னை அர்ப்பணித்தேன். அந்நாள் தொடங்கி என் கடந்த கால வாழ்க்கையில் காணப்பட்ட தீய பழக்க வழக்கங்களுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தேன். அந்தக்கொடுமைகளை விட்டு விடுதலை பெற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பேரருள் அளித்தார்.

(1கொரிந்தியர் 5:21) எந்தவொரு பாவமும் அறியாத அவர் என்னைப் போன்ற பாவிகளுக்காக பலியாகி, அதிக வேதனையை எனக்காய் அவர் பொறுமையுடன் சிலுவையில் சகித்து, உயிர் ஈந்தார் என்பதனையும், அவர் என்னை நீதிமானாக்க, எனக்கு நித்ய கால அழிவில்லா வாழ்வை அருள மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து முதற்பேராய் உயிர்த்தெழுந்து, பூரண மகிமையடைந்தவராய் எனக்காய் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் எனக்குள் வாழ்கிறவராயிருக்கிறார் என்று என் முழு இருதயத்துடன் விசுவாசிக்கிறேன்.


இன்று நான் அவருக்கே சகல கனத்தையும் மகிமையையும், துதிகளையும் செலுத்தி மகிழ்வுடன் நான் வாழ்கிறேன். அது மட்டுமல்ல நான் மற்றவர்களுக்கு ஆண்டவரின் நற்செய்தியைக் கூறுகிறேன். அதை நான் பெரும்பாக்கியமாக கருதுகிறேன். கர்த்தர் உங்களையும் சந்திப்பாராக! ஆசீர்வதிப்பாராக

**“கிருபையினாலும், சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்”**
(நீதிமொழிகள் 16:6)





## குறுக்கெழுத்துப் புதிர் இல. 2 விடைகள்

### இடமிருந்து வலம்




1. நடக்கை
2. ஆக்கில்லா
6. சாத்ராக்
7. சாமுவேல்
12. புல்
13. சம்கார்
14. பெலத்தியா
17. துருகம்
20. சாரதி
21. ஊரீம்
22. சீத்திம்
24. யெசுவா
25. பேதுரு






### மேலிருந்து கீழ்



1. நற்சாட்சி
2. ஆத்தாத்
3. பாராக்
4. எலும்புருக்கி
5. லாமேட்
8. முச்சத்திரம்
9. வேதம்
10. பெத்துவேல்
11. லூஸ்
13. சக்கரம்
15. ஊத்ஸ்
16. யெதிதியா
18. துருத்தி
19. கேரீத்
23. துதி
24. வா



கடந்த குறுக்கெழுத்துப் புதிரில் இடமிருந்து வலம் இல 24 ற்கு பதிலாக 23 என தவறாக அச்சடிக்கப்பட்டது. தவறுதலுக்கு மன்னிக்கவும்.

# குறுக்கெழுத்துப் புதிர் இல – 3

கடைசி கால சம்பவங்களோடு தொடர்புடைய வார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ர் | ச் | | | | 2 |
| 3 | | ண் | | ம் | | | | | |
| 4 | ர் | த் | | | 5 | | | | |
| 6 | ந் | | க் | | | ஸ் | | 7 | த் |
| 8 | | | | ம் | ஸ் | | 9 | | |
| 10 | க் | | | ம் | | | | | |
| 11 | | | | ய் | | | | | ன் |
| | 12 | ட் | | ப் | | ட் | | ர் | |
| 13 | த் | | ம் | | ஞ் | 14 | | ன் | ன் |

**இடமிருந்து வலம்**

1. முடிவு கால நிகழ்வுகளில் ஒன்று
3. இது சீக்கிரமாய் நடைபெறும்
4. சகல நாட்களிலும் உயர்ந்த நாமம்
6. இவர்களே வஞ்சிப்பவர்கள்
8. இல. 3 நடைபெற இது சகல நாட்களிலும் பரப்பப்பட வேண்டும்.
9. இல.8 நடந்தால் இது கட்டாயம் நடைபெறும்.
10. இதின் ஒலி மரித்தோரை எழுப்பும்.
11. இது பரவ வைத்தியர்கள் கூட பாதிக்கப்படுவார்கள்.
12. இவர்களே இராஜ்ஜியத்தில் ஆட்சி செய்வார்கள்.
14. அவனவன் கிரியைகளின்படி இது நிச்சயம் கிடைக்கும்.

**வலமிருந்து இடம்**

14. இதுவும் கடைசி நாட்களின் நிகழ்வுகளில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

2. இராஜ்ஜியத்தை சுதந்தரிப்போர்
5. அபிஷேகம் பண்ணப்பட்டவர்
7. இவர்களில் சற்று சிறியவர்கள் நாம்
23. துதி


**கீழிருந்து மேல்**

14. இதில் ஒன்றையும் எடுத்துக்கொள்ளுங்கள் என கிறிஸ்து கூறினார்.

**தயாரித்தவர்: சகோதரர் V.S. சாமுவேல்**

"எல்லா மனு'ரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்."
1 தீமோத்தேயு 2:4

# ஜீவ ஒளி



கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:


Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901